www.PapaCambridge.com

UNIVERSITY OF CAMBRIDGE INTERNATIONAL EXAMINATIONS
General Certificate of Education Advanced Level

**TAMIL** **9689/04**

Paper 4 Texts **October/November 2013**

**2 hours 30 minutes**

Additional Materials: Answer Booklet/Paper

*1164130137*

**READ THESE INSTRUCTIONS FIRST**

If you have been given an Answer Booklet, follow the instructions on the front cover of the Booklet.
Write your Centre number, candidate number and name on all the work you hand in.
Write in dark blue or black pen.
Do not use staples, paper clips, highlighters, glue or correction fluid.

Answer any **three** questions, each on a different text. You must choose **one** from Section 1, **one** from Section 2 and **one other**.
Write your answers in **Tamil** on the separate answer paper provided.
Dictionaries are **not** permitted.
You may **not** take set texts into the examination.
You should write between 500 and 600 words for each answer.
You are advised to divide your time equally between your answers.

The number of marks is given in brackets [ ] at the end of each question or part question.
At the end of the examination, fasten all your work securely together.

**முதலில் கீழே உள்ளதைப் படிக்கவும்**

விடைகள் எழுதுவதற்காக தாள்கள் கொடுக்கப்பட்டிருந்தால் அதிலுள்ள கட்டளைகளைப் பின்பற்றவும்.
நீங்கள் கொடுக்கும் எல்லா விடைத் தாள்களிலும் உங்கள் பெயர், உங்கள் எண், தேர்வு நிலைய எண் ஆகியவற்றை எழுதவும்.
கருப்பு அல்லது கரு நீல பேனா மையினால் விடைகளை எழுதவும். பசை, பிழை திருத்தும் திரவம், ஸ்டேப்பிள் பின்கள், ஹைலைட்டர்கள், பேப்பர் க்ளிப்புகள் ஆகியவற்றைப் பயன்படுத்தாதீர்கள்.

ஏதாவது **மூன்று** கேள்விகளுக்கு, வேறு வேறு பாடப் பகுதிகளிலிருந்து கேள்விகள் எடுத்து விடைகளை எழுதவும். பகுதி ஒன்றிலிருந்தும் பகுதி இரண்டிலிருந்தும் ஒவ்வொரு கேள்விக்கு கட்டாயமாக விடை தரவேண்டும். மற்றொரு கேள்வியை எந்தப் பகுதியிலிருந்தும் எடுக்கலாம்.
உங்களுடைய விடைகளை தனியாகக் கொடுக்கப்பட்டுள்ள விடைத் தாளில் **தமிழில்** எழுதவும்.
அகராதிகளைத் தேர்வு எழுதும் இடத்துக்குக் **கொண்டுபோகக்கூடாது**.
பாடப் புத்தகங்களைத் தேர்வு எழுதும் இடத்துக்குக் கொண்டுபோகக்கூடாது.
ஒவ்வொரு கேள்விக்கும் 500 முதல் 600 சொற்களில் விடை எழுதவேண்டும்.
தேர்வு எழுதவிருக்கும் நேரத்தை எல்லா விடைகளையும் எழுத சமமாகப் பங்கிட்டுக் கொள்வது நல்லது.

ஒவ்வொரு கேள்விக்கும் உரிய மதிப்பெண்கள் அடைப்புக் குறிக்குள் [ ] தரப்பட்டுள்ளது.
தேர்வு எழுதி முடித்தவுடன் விடைத் தாள்கள் எல்லாவற்றையும் சேர்த்துக் கட்டிக்கொடுக்கவும்.

This document consists of **4** printed pages.

DC (CW/TL) 65442/2
© UCLES 2013
UNIVERSITY of CAMBRIDGE
International Examinations

**[Turn over**

www.PapaCambridge.com

## பகுதி – 1

பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுள்ளும் இரு பிரிவுகள் உள்ளன.

ஏதாவது ஒரு வினாவிற்கு ((அ) அல்லது (ஆ)) விடை தரவும்.

1 (அ) புறநானூறு

பாணன் சூடிய பசும்பொற் தாமரை
மாண் இழை விறலி மாலையொடு விளங்க,
கடும் பரி நெடுந் தேர் பூட்டு விட்டு அசைஇ,
ஊரீர் போலச் சுரத்திடை இருந்தனிர்!
யாரீரோ?' என, வினவல் ஆனா,
காரென் ஒக்கல், கடும் பசி இரவல!
வென் வேல் அண்ணற் காணா ஊங்கே,
நின்னினும் புல்லியேம்மன்னே; இனியே,
இன்னேம் ஆயினேம் மன்னே; என்றும்
உடாஅ, போரா ஆகுதல் அறிந்தும்,
படாஅம் மஞ்ஞைக்கு ஈத்த எம் கோ,
கடா அ யானைக் கலிமான் பேகன்,
எத்துணை ஆயினும் ஈத்தல் நன்று' என,
மறுமை நோக்கின்றோ அன்றே,
பிறர், வறுமை நோக்கின்று, அவன் கைவண்மையே. (புறம்.141)

'மறுமை நோக்கின்றோ அன்றே பிறர் வறுமை நோக்கின்று அவர் கைவண்மையே' என்று பரணர் யாரை ஏன் பாராட்டுகிறார்? [25]

(ஆ) அகநானூறு

(i) பிரிவாற்றாமையால் வருந்தும் தலைவிக்கு தோழி என்ன கூறினாள்? இதை விளக்கவரும் மாமூலனார் என்ன உவமைகளைக் கையாளுகிறார்?

(ii) இந்தப் பாடல் பாலைத்துறையில் எவ்வாறு பொருந்தும்? [25]

© UCLES 2013

www.PapaCambridge.com



ஏதாவது ஒரு வினாவிற்கு ((அ) அல்லது (ஆ)) விடை தரவும்.

**2** திருக்குறள்

(அ)

வினைபகை என்றிரண்டின் எச்சம் நினையுங்கால்
தீயெச்சம் போலத் தெறும்
வினையால் வினையாக்கிக் கோடல் நனைகவுள்
யானையால் யானையாத் தற்று

**(i)** தீயெச்சம், யானையால் யானையாத் தற்று என்ற உவமைகளால் புலவர் விளக்குவது என்ன?

**(ii)** செய்யும் செயல்கள் செவ்வனே நிறைவேற ஏனைய குறள்களில் வள்ளுவர் வழங்கும் அறிவுரை யாது? [25]

(ஆ) ‘செல்வத்துளெல்லாந் தலை’ என்று செவிச் செல்வத்தை வள்ளுவர் போற்றுவது ஏன்? பத்து குறட் பாக்களில் அவர் கூறும் கருத்துக்களைத் தொகுத்து எழுதுக. [25]

ஏதாவது ஒரு வினாவிற்கு ((அ) அல்லது (ஆ)) விடை தரவும்.

**3** தேவாரம் – அப்பர்

(அ)

நாவார நம்பனையே பாடப் பெற்றோம்
நாணற்றார் நள்ளாமே விள்ளப் பெற்றோம்
ஆவாஎன் றெமையாள்வான் அமரர் நாதன்
அயனொடுமாற் கறிவரிய அனலாய் நீண்ட
தேவாதி தேவன் சிவனென் சிந்தை
சேர்ந்திருந்தான் தென்திசைக்கோன் தானே வந்து
கோவாடிக் குற்றேவல் செய்கென் றாலும்
குணமாகக் கொள்ளோம் எண் குணத்துள்ளோமே.

**(i)** ‘இந்தப் பாடலில் ‘தென்திசைக்கோன்’, ‘எண்குணத்துள்ளோமே’ என்ற சொற்களால் அப்பர் என்ன கூறுகிறார்?

**(ii)** இந்தப் பாடலைக் கொண்ட மறுமாற்றத் திருத்தாண்டகத்தில் அவர், சிவனடியார்கள் யார் யாருக்குப் பணியமாட்டார்கள் என்கிறார்? [25]

(ஆ) சிவனடியார்களின் தோற்றம், குணநலன்கள் பற்றி பத்து பாடல்களில் அப்பர் எப்படியெல்லாம் பாடிப் பரவுகிறார் என்று தொகுத்து எழுதுக. [25]

© UCLES 2013

www.PapaCambridge.com

## பகுதி – 2

பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுள்ளும் இரு பிரிவுகள் உள்ளன.

ஏதாவது ஒன்றிற்கு மட்டும் ((அ) அல்லது (ஆ)) விடை தருக.

4 இக்காலக் கவிதைகள்

(அ) பாரதியார்
'தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும்வகை செய்தல் வேண்டும்' என்று பாரதி கருதுவது ஏன்? தமிழின் பெருமை பற்றி அவர் கூறுவதை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக. [25]

(ஆ) பாரதிதாசன்
உயிரை, உணர்வை வளர்ப்பது தமிழே என்று பாரதிதாசன் ஏன் கூறுகிறார்? எடுத்துக்காட்டுகள் தந்து விளக்கவும். [25]

ஏதாவது ஒன்றிற்கு மட்டும் ((அ) அல்லது (ஆ)) விடை தருக.

5 நாடகம்

(அ) சிவகங்கைச் சீமை நாடகத்தில் கண்ணதாசனின் வசனநடை எப்படி உள்ளது? உங்கள் மதிப்பீட்டை எடுத்துக்காட்டுகளோடு விளக்குங்கள். [25]

(ஆ) இந்த நாடகத்தில் அனுதாப உணர்வைப் பெறும் கதாபாத்திரங்கள் யார்? ஏன்? [25]

ஏதாவது ஒன்றிற்கு மட்டும் ((அ) அல்லது (ஆ)) விடை தருக.

6 நவீன தமிழ்ச் சிறுகதைகள்

(அ) அறிஞர் அண்ணாவின் தமிழ் நடையை செவ்வாழை கதையின் வாயிலாக விளக்கி ஒரு கட்டுரை வரைக. [25]

(ஆ) நா.பார்த்தசாரதி ஒரு சிறந்த கதாசிரியர் என்பதற்கு புதிய பாலம் கதையில் என்ன எடுத்துக்காட்டுகள் உள்ளன? [25]

Permission to reproduce items where third-party owned material protected by copyright is included has been sought and cleared where possible. Every reasonable effort has been made by the publisher (UCLES) to trace copyright holders, but if any items requiring clearance have unwittingly been included, the publisher will be pleased to make amends at the earliest possible opportunity.

University of Cambridge International Examinations is part of the Cambridge Assessment Group. Cambridge Assessment is the brand name of University of Cambridge Local Examinations Syndicate (UCLES), which is itself a department of the University of Cambridge.

© UCLES 2013